-

**வாக்குமூலம்**

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**

**வழக்கு எண் : SC.No. 103/2024**

**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பேச்சிமுத்து | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கணேசன் | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | மணிமுத்தாறு | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 16th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சேரன்மகாதேவி காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடையம் காவல்நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது, 18.03.2019ம் தேதி, காலை சுமார் 10.00 மணியளவில் நானும், கடையம் காவல்நிலைய தலைமைக்காவலர் ஜோசப் பொன்ராஜ் என்பவருடன் கோவிலூற்றிலிருந்து இலட்சுமியூருக்கு செல்லும் வழியில் உள்ள கோவிலூற்று குளக்கரையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுக்கள் விற்பனை செய்து வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து விட்டு, ஆய்வாளர் அவர்களின் உத்தரவின் பேரில் எனக்கு சொந்தமான TN-18-J-7174 என்ற பதிவெண் கொண்ட அப்பாச்சி இருசக்கரவாகனத்தில் நானும், ஜோசப் பொன்ராஜ் என்பவரும் கோவிலூற்று குளக்கரையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது, எங்களுக்கு

எதிராக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN-76-AE-7468 என்ற பதிவெண் கொண்ட டி.வி.எஸ் எக்ஸ்.எல் இருசக்கரவாகனத்தில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட தீர்த்ததாரபுரம் நடுத்தெருவைச் சேர்ந்த இசக்கிமுத்து மகன் முருகன் என்பவர் சைகை காட்டி நிறுத்தி கோரியும், நிறுத்தாமல் வேண்டுமென்றே எனது இருசக்கரவாகனத்தில் மோதி ரூ.1000/- மதிப்புள்ள பைக்கின் முன்புறமுள்ள மக்காடை சேதப்படுத்தியும், போலீஸ் பார்ட்டிகளாகிய எங்களைப் பார்த்து, தேவடியா மவன்களா, புண்டா மவன்களா கேரளா மாநிலத்தில் விற்பனை செய்கிறார்கள். தமிழ்நாட்டில் விற்பனை செய்தா குறைஞ்சா போவீங்க என்று சொல்லி முருகன் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து காண்பித்து, என்னை பிடிக்க வந்தால் உங்க இருவரையும் குத்தாமல் விடமாட்டேன் என்று சொன்னார். இதனால் எங்களுக்கு பெருத்த அவமானமும், மனஉளைச்சலும் ஏற்பட்டது. சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக அரசு பணியை செய்ய விடாமல் தடுத்து, ஓடியவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரணை செய்தபோது, எதிரி முருகன் தனது மோட்டார் சைக்கிளின் முன்புறமுள்ள கொக்கியில் உள்ள மஞ்சள் கலர் பையில் ஹரியானா அம்பாலா ஸ்டேட் வீக் என்ற பெயர் கொண்ட முதல் பரிசுத்தொகை ரூபாய் 5 லட்சம், 18.03.2019ம் தேதி குலுக்கலுக்குரிய 57 லாட்டரி சீட்டுக்கள், 19.03.2019ம் தேதி குலுக்கலுக்குரிய 60 லாட்டரி சீட்டுக்கள், 20.03.2019ம் தேதி குலுக்கலுக்குரிய 60 லாட்டரி சீட்டுக்கள், 23.03.2019ம் தேதி குலுக்கலுக்குரிய 60 லாட்டரி சீட்டுக்கள், 24.03.2019ம் தேதி குலுக்கலுக்குரிய 60 லாட்டரி சீட்டுக்கள் மொத்தம் 417 லாட்டரி சீட்டுக்களையும், லாட்டரி சீட்டு ஒன்றின் விலை ரூ.100/- வீதம் மொத்தம்

ரூ.41700/– மதிப்புள்ள 417 லாட்டரி சீட்டுக்களை வைத்திருந்தார். மேற்படி முருகன் என்பவரை பிடித்து விசாரித்தபோது, தனது நண்பரான பெரியசாமியின் மகன் கேசவராஜா என்பவர் கேரளாவிலிருந்து TN–76–AH–8599 என்ற பதிவெண் கொண்ட ஆக்ட்வா வாகனத்தில் கேரளாவில் இருந்து மேற்படி லாட்டரி சீட்டுக்களை வாங்கி கொண்டு வந்து, மேற்படி முருகன் என்பவரிடம் 420 லாட்டரி சீட்டுக்களை விற்பனைக்கு கொடுத்திருப்பதாகவும், அதில் 3 லாட்டரி சீட்டுக்களை விற்பனை செய்ததாகவும் கூறினார். லாட்டரி சீட்டு விற்ற பணம் ரூ.300/– மற்றும் 417 லாட்டரி சீட்டுக்களை எடுத்து கொடுத்தார். தமிழக அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுக்களை கேரளா மாநிலத்தில் இருந்து வாங்கி கொண்டு வந்து, விற்பனை செய்த குற்றத்திற்காக முருகன் என்பவரை கைது செய்து, அவரிடமிருந்து பணம் ரூ.300/– மற்றும் 417 லாட்டரி சீட்டுக்கள், TN–76–AE–7468 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனத்தையும், எங்களை மிரட்ட பயன்படுத்திய கத்தியையும் எதிரி முருகன் என்பவரிடமிருந்து பறிமுதல் செய்து அத்தாட்சி தயார் செய்தோம். அந்த அத்தாட்சியில் தனிநபர்கள் யாரும் கையொப்பமிட முன்வராததினால் போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 அத்தாட்சியிலுள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். TN–76–AE–7468 என்ற பதிவெண் கொண்ட XL இருசக்கரவாகனம் – அ.சா.பொ.10 ஆகும். 24.03.2019ம் தேதி குலுக்கலுக்குரிய 60 லாட்டரி சீட்டுக்கள் – அ.சா.பொ.11 வரிசை ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளவாறு தான் ஆய்வாளர் விசாரணையிலும் கூறியுள்ளேன். ரோந்து பணி விபரங்களை பொதுநாட்குறிப்பிலும், பாக்கெட் டைரியிலும் குறிப்பிடுவோம். ஆய்வாளர் எழுத்து மூலமாக உத்தரவிடவில்லை. நான் ரோந்து பணிக்கு சென்றது பொதுநாட்குறிப்பிலும், பாக்கெட் டைரியிலும் துலங்கும். அந்த ஆவணங்களை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை. ரோந்து வாகனத்தை நான் தான் ஓட்டினேன். இந்த வழக்கிற்கு முன்பு எதிரியை எனக்கு தெரியாது. எதிரியை 100 மீட்டர் தூரத்தில் பார்த்தேன். சம்பவநாள் வேறு எங்கும் ரோந்திற்கு செல்லவில்லை. எதிரியின் வாகனத்தை பார்த்தவுடன் அவரை நிறுத்த சொல்லி ஜோசப் பொன்ராஜ் சைகை காட்டினார். எதிரியின் இருசக்கரவாகனம் சேதம் ஏற்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய வாகனத்தை விட எதிரியின் வாகனம் சின்ன வாகனம் என்றால் சரிதான். சேதமதிப்பை உறுதி செய்ய மோட்டார் ஆய்வாளரிடம் ஆய்விற்கு அனுப்பவில்லை. எதிரியின் வாகனத்தை ஆய்விற்கு அனுப்பவில்லை. வாகனத்தின் மட்காட் சேதமடைந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாகனத்தின் சேதத்தை காண்பிக்கும் புகைப்படத்தை எடுத்துள்ளோம். நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வயதானவர் என்றாலும், எங்களை மிரட்டியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. ரோந்திற்கு செல்லும் போது, லத்தி கொண்டு போவது வழக்கம் என்றால் சரிதான். தற்காப்பிற்காக லத்தியால் அடிக்கவில்லை. சம்பவயிடம் பொதுமக்கள் நடமாடும் இடம் என்றால் சரிதான். அதற்கு அருகில் வயல் இருப்பதினால், ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் 50 நபர்கள்

கூடியிருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி லாட்டரி சீட்டுக்கள் எதுவும் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எங்களை அவதூறான வார்த்தைகள் பேசி, அரசு பணியை செய்யவிடாமல் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.பொ.8, 9 கடையில் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். அதனை வாங்கி எதிரி மீது இந்த வழக்கை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.23 17:00:26 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 103/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-9</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜீவ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஞானப்பிரகாசம் | தொழில் | : | தனியார்வேலை |
| கிராமம் | : | அம்பாசமுத்திரம் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 22nd, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது அம்பாசமுத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். டீ.வி.எஸ் ஷோ ரூமில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். 27.03.2019 அன்று கடையம் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க TVS Appachi RTR-160 Model வாகனத்தின் முன்பக்க மக்காட்டின் சேதமதிப்பு ரூ.1120/- எனச் சான்று வழங்கினேன். அந்த சான்று அ.சா.ஆ.8 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எங்கள் நிறுவனத்தில் பொருள் வாங்கும்போது பில் கொடுப்போம். போலீசார் கொட்டேஷன் கேட்டதினால் கொட்டேஷன் கொடுத்தேன். நான் சொன்ன மாதிரி போலீசார் என்னிடம் எந்த சான்றும் கேட்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.23 17:00:34 +0530